அகத்தியன்




# சிறப்புடன் நடந்த 16வது உலக தமிழிணைய மாநாடு

கணினித் தமிழை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்காக விவாதத்தை நடத்துவதற்க்கும், அதற்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்கும் 16 உலக தமிழ் மாநாடு கனடா நாட்டு தலைநகரம் டொரொண்டோவில் நடந்தது.

இந்த மாநாட்டினை அமெரிக்காவை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வரும் உத்தமம் (உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்) என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இம்மாநாட்டில் ஆழ்த்தமிழின் அழகும் ஆழக்கற்றல் திறனும் (Deep Learning) மற்றும் தமிழில் தரவு அறிவியல் (Data Science) ஆகிய பல தலைப்புகளின் கீழ் இத்துறையில் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்கள் தங்களது ஆய்வு கட்டுரைகளை சமர்பித்தனர்.

உத்தமம் ஒரு தன்னார்வப் பன்னாட்டு நிறுவனம். இந்த அமைப்பு உலகமெங்கும் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ்த் தொழில் முனைவோர், தமிழ்க் கணினியாளர்கள், நிரலர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரை ஒருங்கிணைப்பதை தனது முதன்மையான நோக்கமாக இது கொண்டு செயல்பட்டு வருகிறது.

உலகில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் நாடுகளான இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடந்த 15 ஆண்டுகளாக இம்மன்றத்தின் சார்பில் ஆய்வரங்கம், கருத்தரங்கம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய உலகத் தமிழிணைய மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த தமிழிணைய மாநாட்டின் ஆய்வரங்கத்தில் சமர்பிக்கப் பட்டதில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மூலம் விரைவில் புத்தகமாக வெளியிடவுள்ளதாக மாநாட்டில் தெரிவித்துள்ளனர்.

இம்மாநாட்டின் தலைவர் வாட்டர்லூ பல்கலைக்கழக பேராசிரியர் செல்வக்குமார் பேசுகையில், "ஒவ்வொரு ஆண்டும் இப்படி நடக்கும் கருத்தரங்கு மாநாடுகளால் அறிவுப்பரவலாக்கம் நடைபெறுகிறது. ஆய்வுக்கருத்துகள் பயனுடைய கருவிகளாகவும் செயலிகளாகவும் உருவாகத் துணையாக இருக்கிறது. நம்மிடையே ஓர் அறிவுக்குழுமம் உருவாகி கூட்டாகச் செயற்பட உதவுகின்றது. தொழில்முனைவோர், அரசு, பயனாளிகளான மக்கள், நிறுவனங்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே நேரடித்தொடர்பும் கிட்டுகிறது. தமிழ்க் கணிமைக்கென இப்படி ஓர் அமைப்பும் வாய்ப்பும் தனியாக இல்லாமல் இருந்தது. இந்த ஆய் வரங்க மாநாட்டுத் தொடர் அக்குறையைக் கடந்த 15 ஆண்டுகளாகத் தீர்த்து வருகிறது. மாநாட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு ஓராண்டில் என்னென்ன முக்கியமான முன்னேற்றங்கள் நடந்துள்ளன என அறிய உதவுகின்றன" என்றார்.

> இம்மாநாட்டில் நமது சிறப்பு செய்தியாளர் "சாய்ராம் ஜெயராமன், 2016ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலும், தமிழக இளைஞர்களின் அரசியல் சமூக இணையதளப் பயன்பாடும்" என்ற தலைப்பில் ஒரு ஆய்வு கட்டுரையை சமர்பித்து பரிசு பெற்றார் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துகொள்கிறோம்.

வெற்றிகரமாக நடந்து முடிந்த இந்த மாநாட்டில் ஏராளமான கணிணி அறிஞர்கள் தமிழ் மொழியை கணிணிக்குள் வெற்றிகரமாக பயன்படுத்தி காற்றில் தமிழை பரவ விடும் முயற்சிகள் மற்றும் வழிகள் குறித்து விளக்கினர். அது குறித்து பல்வேறு ஆய்வு கட்டுரைகளை வாசித்தனர்.

மேலும், இணையத்தில் யூனிக்கோடு எழுத்துருவை பயன்படுத்துவதற்கு தற்போது மிக குறைந்த இடமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை அதிகப்படுத்துவதற்கு இணைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்றிடவும், இயங்குதளங்களில் (ஆப்பரேட்டிங் சிஸ்டம்) தமிழை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கும் கூகுள், மைக்ரோ சாப்ட், ஆப்பிள் உள் ளிட்ட நிறுவனங்களிடம் பேசுவதற்கு ஒரு வல்லுநர் குழு அமைத்து, அவர்கள் மூலம் தொடர் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழை உயிராக நேசிப்பவர்களும் தமிழை சுவாசிப்பவர்களுக்கும் கணிணியில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த மாநாடு தொடங்கி வைத்து இருக்கிறது. இவர்களின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள். இவர்களின் அனைத்து விதமான முயற்சிகளுக்கும் நமது " ஹலோ ஆசியா" இதழ் கைகொடுத்து தனது முழு ஆதரவினை வழங்கும் என்பதை தெரிவித்துகொள்கிறோம்.

ஹலோ ஏசியா
தமிழ் செய்தித்தாள்
சந்தாதாரர் அடையாள
அட்டையின் மூலம்
உங்கள் சேமிப்புகளை
துவங்க, இன்றே
எங்களின் சந்தாதாரர்
ஆகுங்கள்.
www.helloasianews.com/Subscribe.htm



**Advertisement Starts from $20. Contact our Advertising Sales Managers**

சிவில் சேவைகளில் பாலின சமத்துவம் பேணப்படும் நாடுகள் பட்டியலில் 46.4 சதவீத பெண்களுடன் கனடா முதல் இடத்தில் உள்ளது.

அண்மையில் அரசாங்கங்கள் பற்றிய சர்வதேச ஆய்வு முடிகள் வெளியாகின. இதில்தான் இந்தப் புள்ளி விபரங்கள் வெளியாகியுள்ளன. இதன்படி, அரசாங்கப் பதவிகளில் பெண்களுக்கு சம வாய்ப்பு வழங்குவதாக கனடாவுக்கு நற்சான்றிதழ் கிடைத்துள்ளது. கனடாவைத் தொடர்ந்து 43.3 சதவீத பெண்களுடன் ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும், 41.1 சதவீத பெண்களுடன் தென் ஆப்பிரிக்கா மூன்றாவது இடத்திலும் 40.1 சதவீத பெண்களுடன் பிரிட்டன் நான்காவது இடத்திலும் 37.8 சதவீத பெண்களுடன் பிரெசில் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. கடந்த 2015ம் ஆண்டு கனடா பிரதமராக ஜஸ்டின்ன் ட்ரூடோ தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவர் தன் னுடைய அமைச்சரவையில் பாலின சமத் துவத்தை ஏற்படுத்த விரும்புவதாக அறிவித்திருந்தார். அதை அவர் நடைமுறையில் சாத்தியமும்படுத்தியுள்ளார்.






# எட்மண்டனில் நாம் தமிழர் பாசறை.

சு. முருகானந்தம்



நாம் தமிழர் பாசறை என்ற புதியதொரு இயக்கம், தமிழ், தமிழன் என்ற முழக்கத்தோடு எட்மண்டனில் கடந்த செப்டம்பர் 8ம் தேதி மாலை நாம் தமிழர் பாசறை என்ற பெயருடன் துவங்கியது. நிகழ்ச்சியில் நாம் தமிழர் பாசறை இயக்கத்தின் இயக்குனர் திருமதி சுவாதிகா அருண் வரவேற்புரை நிகழ்த்தி, தமிழர்கள் ஒற்றுமை எனும் தலைப்பில் திரு மாதவன் சக்திவேல், பாசறை ஒருங்கிணைப்பாளர் உரையாற்றினார். நிகழ்ச்சியில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைப்பெற்றது. ஏராளமான தமிழ் உணர்வாளர்கள் கூட்டத்திற்கு வந்திருந்து தங்கள் கருத்துக்களை வழங்கினர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு திரு. அருண் இரத்தினம், பாசறை செயலாளர், நன்றி கூறினார்.





நிகழ்ச்சியில் உரையாற்றியவர்களில் சிலர்...


மாதவன்
கார்த்திக்
சித்ராதேவி
கூட்டதில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி
கோபால்
ராஜேந்திரன்
மோகன்
சீனிவாசன்
அருண்